**OPEN ACCESS**

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.2.2020

Accepted: 15.3.2020

Published: 01.04.2020

Citation:
A.K.Chettiar's Documentary on Mahatma Gandhi - An Over View. *Shanlax International Journal of Tamil Research*, *4*(4), 131–141.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.3280

*Corresponding Author:
dr.t.ravichandran1959@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A.K.Chettiar's Documentary on Mahatma Gandhi - An Over View

**Dr. T. Ravichandran**

*Assistant Professor, Centre for Gandhian Studies*

*Gandhigram Rural Institute-Deemed to be University*

*Dindigal, Tamil Nadu, India*

https://orcid.org/0000-0003-1927-1372

**Abstract -** Mahatma Gandhi, popularly known as the Father of the nation, wasnot only a preacher but a committed practical idealist. For want of some earning he went to South Africa but totally transformed himself into a liberator of the downtrodden, suppressed Indian community. He successfully invented the weapon of 'Satyagraha' and retained the lost human right for the Indians in South Africa. He also did the same in India to politically liberatethe country from the British. Gandhi was a multi-faceted personality. He was a Lawyer, Journalist, Writer, Biographer, Ashram builder, great thinker, a Political leader, a spiritualist, a Constructive Worker and above all a humane person who practiced Truth and Nonviolence till his last breath.

A.K.Chettiar was a Tamil Documentary Film Maker, Journalist and Traveloque writer. He ventured a priceless documentary on Mahatma Gandhi. A.K.Chettiar widely travelled in England, USA, South Africa and India. He met and filmed innumerable number of leaders like Romain Rolland, Maria Montessori, Sir C.V.Raman, Dr.S.Radhakrishnan, Pandit Jawaharlal Nehru, C.F.Andrews and many others. He collected about 50,000 feet (15,000 m) of film footage, edited them into 12,000 feet (3,700 m). That documentary film was released on 23rd August 1940 in Chennai. Later the Hindi Version was shown on 15th Aug. 1947 in Delhi and later the English version was shown in Los Angeles in the U.S. Without his efforts, many live pictures of Mahatma Gandhi would not have been available for us. His documentary, In the Footsteps of the Mahatma. Without him, we would not have got the opportunity to see the valuable footages of Gandhiji.

**Key Words:** Mahatma gandhi, A.K. Chettiar, London, Charlie chaplain, Satyagraha, ashrams, Romain rolland, Documentary, Ulagam suttriya tamizhan, Annal adichuvattil, Kumari malar, Dana vanigan, Khadi, Raattai, Camera, Negatives, Los angeles, Raxi theatre, Imperial theatre.

## References

1. A.K.Chettiar, Annal Adichuvattil, Thennithiya Saiva Sittantha Noorpathippu kalakam, Chennai, 2003.
2. A.K.Chettiar, Annal Adichuvattil, A.R.Venkatachalapathy (Editor), Kalachuvadu Pathipagam, 2003
3. A.K.Chettiar, Ulagam Suttrum Tamilan, Kumarimalar Kaariyalayam, Chennai, 1957. Pathipagam, Chennai, 2016.
5. Theodore Baskaran, 29.09.2002 "The making of Mahatma Gandhi" The Hindu (Ref. 18-06-2011).
6. M.Revathy "A.K. Chettiar – Tamil Valartha Sandrorgal" 1997.
7. "A Documentary on Gandhi" The Hindu Metro Plus, 26.07.2004 (Ref. 18-06-2011).

# ஏ.கே.செட்டியாரின் காந்தி ஆவணப்படம்: ஒரு கண்ணோட்டம்

*முனைவர் த. ரவிச்சந்திரன்*
உதவிப்பேராசிரியர், காந்திய ஆராய்ச்சி மையம்,
காந்திகிராம கிராமிய நிகரநிலைப் பல்கலைக்கழகம்.

## காந்திஆவணப்படம்

*மகாத்மா காந்தியைப் பற்றிய ஆவணப்படம் எடுப்பதற்காக தனிநபராகக் கடினப்பட்டு, உலகம் சுற்றிய தமிழரான ஏ.கே.செட்டியார் அவ்ஆவணப்படத்தை எடுத்து முடித்தார். மிகுந்த சிரமங்களை அனுபவித்து, பல்லாண்டுகள் முயன்று, கையிருப்பையெல்லாம் செலவழித்து இவ்அரிய ஆவணப்படத்தை எடுத்தார். மகாத்மா காந்தியின் முக்கியமான செயல்பாடுகள், அவரைப்பற்றிய உலகத்தலைவர்கள், செயல்பாட்டாளர்கள், இலக்கியவாதிகளின் பேட்டிகள் இவ்ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ளன. "இப்படி ஒரு மனிதன் இக்காலத்தில் நம்மிடையே வாழ்ந்தார் என்பதை வருங்கால சமுதாயம் நம்ப மறுக்கும்" என காந்தியைப் பற்றி விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் குறிப்பிட்டுள்ளார். உலகம் சுற்றிய தமிழரான ஏ.கே.செட்டியார் மேற்கொண்ட உலகச் சுற்றுப் பயணங்கள் மூன்றில் ஒன்று காந்தி ஆவணப்படம் எடுப்பதற்காகவே நிகழ்ந்ததாகும். 2/10/1937 அன்று காந்தி பிறந்தநாளில் ஏ.கே.செட்டியாருக்கு காந்தி ஆவணப்படம் எடுக்க வேண்டும் எனும் எண்ணம் தோன்றி ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட காமிராக்களைப் பயன்படுத்தி, ஒரு லட்சம் மைலுக்கு மேல் பயணித்து, முப்பது ஆண்டுகளில் படம்பிடித்த 50000 அடி நீளமுள்ள படங்களைத் தேடி எடுத்து 12000 அடிகள் நீளமுள்ள படமாகத் தொகுத்து 1940 இல் வெளியிட்டார். அப்போது அவருக்கு வயது 29. காந்தியை நேரடியாகச் சந்தித்து படம்பிடித்து நான்காண்டுகள் ஐரோப்பா முழுவதும் பயணம் செய்து அவரைப் பற்றிய படச்சுருள்களைத் தயாரித்தார். 23/08/1940 இல் இவ்ஆவணப்படத்தை சென்னையில் வெளியிட்டார். இது தமிழ் வர்ணனையுடன் வெளிவந்த காந்தி பற்றிய முதல் ஆவணப்படம் ஆகும். பின்னர் இது தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு திரையிடப்பட்டது. பின்னர' தில்லியில் திரையிட்டார். இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் இதனைப் பார்வையிட்டார். அன்றைய பிரதமர் நேருவின் மகள் இந்திராகாந்தியும் இப்படத்தினைக் கண்டார். பின்னர் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு 1953இல் அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் திரையிடப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர் அதனைப் பார்வையிட்டார். ஏ.கே செட்டியார் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஐரோப்பாவிலும் 30க்கும் மேற்பட்ட செய்திப்பட கம்பெனிகளுக்குச் சென்று காந்திஜியின் வாழ்க்கைக்கு உபயோகமான எல்லா படங்களையும் சேகரித்துள்ளார். கோபாலகிருஷ்ண கோகலே தென்னாப்பிரிக்கா சென்றபோது அவரையும் காந்தியையும் சேர்த்து ஆவணப்படம் எடுத்துள்ளனர்.*

## காந்தி ஆவணப்படம் – மையச் சொற்கள்

*தமிழ் ஆவணப்படம், உலகம் சுற்றும் தமிழன், ஏ.கே.செட்டியார், கோகலே, தென்னாப்பிரிக்கா வருகை, மரியா மாண்டிசோரி, தண்டி யாத்திரை, நேதாஜி, ஐக்கிய நாடுகள் சபை, சி.எப். ஆண்ட்ரூஸ் சர்.சி.வி.ராமன், நேரு, ஆச்சார்யா கிருபளானி, டாக்டர் ராதாகிருஷ்ணன், ராட்டை.*

மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த ஆண்டு உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. காந்தியடிகள் ஒரு பன்முகப் பரிமாணம் கொண்ட அற்புதமான மனிதர். இந்திய விடுதலைப் போராட்டத்தினை அகிம்சை வழியிலே தலைமை ஏற்று நடத்தி வெற்றிகரமாக முடித்துக் காட்டியவர். இந்திய நாட்டிற்குத் தேவை முழுமையான விடுதலை அதாவது பொருளாதார விடுதலை மற்றும் கலாச்சார விடுதலை என முழுமையான விடுதலையை நோக்கி அவரது வாழ்க்கைப் பயணம் அமைந்திருந்தது. ஒவ்வொரு நொடியும் அகிம்சை மற்றும் சத்தியத்தோடு பரிசோதனைகளை மேற்கொண்டவர். தாம் வாழ்ந்த காலத்திலே மிகப்பெரிய ஆளுமைகளான பேரறிஞர்பெர்னாட்ஷா, சார்லி சாப்ளின் உள்ளிட்ட மிகப்பெரிய அறிஞர்களை நேரிடையாக சந்தித்து அவர்களோடு நட்பு பாராட்டி உரையாடியவர். ரவிந்திரநாத்தாகூராரோடு நல்ல நட்பு பாராட்டியவர். தாகூர் சில விஷயங்களில் காந்தியுடன் மாற்றுக் கருத்து டையவராக இருந்தாலும் அவரை மகாத்மா என்று அழைத்தார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், சுசுதேசப்பிதாசுசு என்று அழைத்தார். அதேபோன்று அக்காலத்தில் வாழ்ந்த ரஷ்ய பேரறிஞர்ஞானி லியோடால்ஸ்டாய்க்கும் காந்திக்கும் நீண்ட தொடர்பு இருந்ததை நாம் அறிவோம். ஆல்பர்ட் ஐன்ஸ்டீனோடு ஒரு கருத்தொற்றுமை ஏற்பட்டு நட்பு பாராட்டியவர் தான் மகாத்மா காந்தி. எனவே தான் காந்தியடிகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது ஐன்ஸ்டீன் இவ்வாறு கூறினார்: “இப்படி ஒரு மனிதன் இக்காலத்தில் நம்மிடையே வாழ்ந்தார் என்பதை வருங்காலச் சமுதாயம் நம்ப மறுக்கும்”.இவ்வாறு தான் வாழ்ந்த காலத்தில் மிகப்பெரிய ஆளுமைகளோடு உரையாடி மகிழ்ந்து ஒரு புதிய பரிமாணத் தினைக் கொடுத்தவர்காந்தியடிகள் காந்தியடிகளைப் பற்றி அவா்களுடைய வாழ்க்கைத் தொகுதிகளாக ஆங்கிலத்திலே “The Collected Works of Mahatma Gandhi” என்று 100 நூல்களை நமது மத்திய அரசின் செய்தித்துறை வெளியிட்டுள்ளது. இவை நம் தமிழ் மொழியிலே 18 நூல்களாக வெளிவந்துள்ளன. “சத்தியசோதனை” எனும் “என் வாழ்க்கைக் கதை” “The Story of My Experiments With Truth” “தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம்”, “ஆரோக்கிய திறவுகோல்” “இந்திய சுயராஜ்யம்” ஆகிய கருத்துச் செறிவு மிக்க சிறந்த நூல்களைக் காந்தியடிகள் எழுதியுள்ளார். Indian Opinion, Young India, Navajeevan, Harijan போன்ற பத்திரிகைகளை நடத்திய ஒரு பத்திரிக்கையாளர் மகாத்மா. அதேபோல கூட்டு வாழ்க்கை - உலகம் ஒரு குடும்பம் என்கின்ற தத்துவத்தை வலியுறுத்தி தென்னாப்பிரிக்காவிலே ஃபீனிக்ஸ் ஆசிரமம், டால்ஸ்டாஸ் பண்ணை, இந்தியாவிலே கோச்ராப் ஆசிரமம், சபா்மதி ஆசிரமம் மற்றும் சேவாகிராமம் ஆகிய ஆசிரமங்களை நிறுவிக் கூட்டு வாழ்க்கை வாழ்ந்து ஒரு புதிய சர்வோதய சமுதாயம் அமைப்பதற்கான ச த்தியாகிரகிகளை உருவாக்கியவர்காந்தி. குஜராத் வித்யாபீடம் என்கிற இந்திய முறைப்படியான பல்கலைக்கழகம், மிகப்பெரிய அச்சகமான நவஜீவன் அச்சகம், கதர்கிராமக் கைத் தொழில்களைப் போற்றுவதற்காக கதர்மற்றும் கிராமக் கைத்தொழில் சங்கம் போன்ற பல நிறுவனங்களையும் உருவாக்கியவர் மகாத்மா காந்தி. ஏ. கே. செட்டியாரின் வாழ்க்கைக் குறிப்பு 1911ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் நாள் செட்டிநாட்டுக் கோட்டையூரில் ஏ.கே. செட்டியார் பிறந்தார். அடக்கம், விளம்பரம்விரும்பாத குணம் ஆகியவற்றால் இவருடைய முழு வரலாறு முழுமையாக எங்கும் பதிவு செய்யப்பட்டதில்லை. வரலாற்றறிஞர் ஆ.இரா.வேங்கடாசலபதி “அண்ணல் அடிச்சுவட்டில்” எனும் நூலில் ஏ.கே.செட்டியாரின் பல்வேறு வாழ்க்கை

வரலாற்று நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார். இவர் திருவண்ணாமலையில் எட்டு ஆண்டுகள் பள்ளியிலும் 24 நாட்கள் சிறையிலுமாகக் கழித்தவர் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றுள்ளார். இளவயதிலேயே பத்திரிகை படிக்கும் ஆர்வம் அவருக்கு மிகுந்திருந்திருக்கின்றது. 1928ஆம் ஆண்டு ஆனந்தவிகடனில் "சாரதாம்பாள் - சிறுதமிழ்" என்ற ஒரே கதையைக் கோட்டையூர் ஏ.கே.செட்டியார் என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறார். 1933ஆம் ஆண்டு இறுதியில் பர்மா நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் நடத்திய "தனவணிகன்" இதழுக்கு ஆசிரியராக பர்மா சென்றதாக சோமலெ குறிப்பிட்டுள்ளார். 1936இல் ஜப்பான் எனும் தன் முதல் பயண நூலினை ரங்கூனிலிருந்து வெளியிட்டிருக்கின்றார். 1936-1937இல் டோக்கியோ புகைப்படக்கலையில் பயிற்சி பெற்றுள்ளார். பின்னர் "குமரி மலர்" எனும் ஒரு அச்சகத்தைப் நீண்டகாலம் சென்னையில் நடத்தியுள்ளார். டி.வி.எஸ், டி.டி.கே, ஏ.பி.டி பார்சல், ஏசியன் டிராவல்ஸ் போன்ற பல தொழில் குழுமங்களின் ஆதரவை தம்தகுதிக்கு எந்தவகையிலும் குறைவு வராமலேயே பெற்றார் என்றும் பலர்கூறியுள்ளனர்.

கொள்கைப் பற்றுள்ள ஏ.கே.செட்டியார் காலம் தவறாமையையும் எங்கும் நடந்தே செல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார் பல பயண நூல்களை எழுதியுள்ள இவர் "உலகம் சுற்றும் தமிழன்" என்ற தனது நூற்பெயரையே தன்னுடைய சிறப்புப் பெயராகக் கொண்டுள்ளார். இவரது பயண நூல்களைப்பற்றிக் குறிப்படும் பொழுது அவர்மேற்கொண்ட உலகச் சுற்றுப் பயணங்கள் மூன்றில் இரண்டு காந்தி படத் தயாரிப்புக்காகவே என்பது சிறப்பு ஆகும். அதே போன்று அறிஞர்களின் பொன்மொழிகளைத் தொகுத்து, ஆயிரக்கணக்கில் அச்சிட்டு, கல்வி நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளார். நாற்பதாண்டுக் காலம் நடத்திய "குமரி மலர்" என்ற மாத இதழைத் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றை ஆவணப்படுத்துவதற்கு முக்கிய கருவியாகக் கைக்கொண்டார். 1940இல் காந்திபடம் வெளிவந்தபிறகு அங்கொன்றும், இங்கொன்றுமாகக் காந்திபட உருவாக்கம் பற்றிச் சில குறிப்புக்களையும், கட்டுரைகளையும் ஏ.கே செட்டியார் எழுதியிருந்தார். ஆனாலும் 1978-1979இல் தான் இவ்வனுபவங்களை "அண்ணல் அடிச்சுவட்டில்" கட்டுரைத் தொடரில் வெளியிட்டுள்ளார்.

காந்தி ஆவணத்திரைப்படம் காந்தியடிகளைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு நூல்களை எழுதியுள்ளனர். அவர்களுடைய நூல்கள்பல்வேறு மொழிகளிலே வெளிவந்து இருக்கின்றன. காந்தியைப் பற்றிய விமர்சனங்களும் அதிகளவிலே இன்றுவரை வந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் காந்தியைப் பற்றி ஒரு திரைப்படச்சுருள் தயாரிக்க வேண்டும், அண்ணலின் வரலாறை அப்படச்சுருள் வாயிலாக உலகம் முழுதும் மக்கள் மத்தியிலே வெளியிட வேண்டும் என்கிற எண்ணம் ஏ.கே. செட்டியர் என்கிற ஒரு தமிழ் இளைஞருக்குத் தோன்றியது ஆச்சரியமான விஷயம்.

இலண்டன் மாநகரில் திரைப்படக் கலைஞர்சார்லிசாப்ளினோடு 1931இல் அவர்உரையாடியதன் பயனாக 1940களில் சாப்ளின் ஹிட்லரின் நாசிசக் கொள்கைகளைக் கண்டித்து எடுத்ததயாரித்த "தி கிரேட் டிக்டேட்டர்" படத்தில் இறுதியில் வரும் தனிப்பேச்சில் (Soliloquy) மிக அருமையாக அகிம்சையின் முக்கியத்துவத்தை உணா்த்தியுள்ளார். இப்படம் உலகமுழுவதும் பலரால் பார்த்து, ரசித்துப் பாராட்டப்பட்டது. இவ்வாறே உலகம் சுற்றும் தமிழரான ஏ.கே.செட்டியாருக்கு

அமெரிக்காவின் நியுயார்க்கிலிருந்து அயர்லாந்தின் டப்ளின் நகருக்கு கப்பலில் பயணிக்கும்போது ஒரு கனவு உதித்தது. 1937 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதியான காந்தியடிகளின் பிறந்த தினத்தன்று அக்கனவு பிறந்து ஆச்சிரியமான விஷயம். அக்கனவினை நனவாக்க காந்தி பற்றி ஒரு ஆவணப்படம் தயாரிப்பது என அவர் உறுதியான முடிவெடுத்தார். 1936-1937இல் டோக்கியோ கலைக் கல்லூரியிலும், நியுயார்க் புகைப்பட நிறுவனத்திலும் புகைப்படக்கலையில் முறையான கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர் அத்தமிழ் இளைஞர். தாம்கண்ட கனவினை நனவாக்க அவ்விளைஞர் இதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபடலானார். ஏறத்தாழ 100க்கு மேற்பட்ட காமிராக்களைப் பயன்படுத்தி ஒருலட்சம் மைலுக்கு மேல் பயணித்து முப்பது ஆண்டுகளில் படம்பிடித்த 50,000 அடிகள் நீளமுள்ள படங்களை பெருமுயற்சி செய்துத் தேடியெடுத்து 12,000 அடிகள் நீளமுள்ள படமாக முறையாகத் தொகுத்து 1940இல் அதனை வெளியிட்டார். அப்போது அ.ராம்.அ.கருப்பன் செட்டியார் என்ற ஏ.கே.செட்டியாருக்கு 29 வயதுதான்.

காந்தியடிகளின் வாழ்க்கையை ஆய்வு செய்யும் போது அவர்பிறந்ததில் இருந்து, இறந்தது வரை நான்கு பகுதிகளாக நாம் பிரிக்கலாம். முதல் பகுதியானது 1869 அக்டோபர் 2 ஆம் நாள் முதல் 1888 வரை. அது அவருடைய குழந்தைப் பருவம் மற்றும் இளமைக்காலப் பருவம். 1888-1891 வரை 3 ஆண்டுகள் ஏறத்தாழ் 36 மாதங்கள் இலண்டன் மாநகரிலே சென்று படித்து ஒரு வழக்கறிஞராக இந்தியாவிற்குத் திரும்பி வந்தார். இது இலண்டன் வாழ்க்கைக்காலம் என்று சொல்லலாம். அதன் பின்னர் 1893 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க நாட்டிற்குப் பயணமானார். 21 ஆண்டுகள் தென்னாப்பிரிக்கவில் வாழ்ந்து சத்தியாகிரகம் என்னும் ஆயுதத்தைக் கண்டுபிடித்து இந்தியர்களுடைய உரிமைக்காகப் போராடி வெற்றிகரமாக அதை நடத்திக் காட்டித் திரும்பினார். இது அவரின் தென்னாப்பிரிக்க வாழ்க்கைக் காலம் என்று கூறலாம். 1893-1914 வரை ஏறத்தாழ 21 ஆண்டுகள் தென்னாப்பிக்காவில் வாழ்ந்தார். 1915 ஆண்டு ஜனவரி 9ஆம் தேதி தென்னாப்பிரிக்காவில் இருந்து கப்பலில் வந்துமும்பை மாநகரில் இறங்கினார். 1915 முதல் 1948 ஜனவரி 30 வரை இந்தியாவில் அவர்வாழ்ந்தார்.

ஏ.கே.செட்டியாருக்கு காந்தியடிகளைப் பற்றி ஆர்வம் வந்தது. அவரைப் பற்றி ஒரு திரைப்படச்சுருள் தயரிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. 1937ஆம் ஆண்டு ஏ.கே. செட்டியார் காந்தியை நேரடியாக அவருடன் இருந்து படம் பிடித்து 1937இல் இருந்து 1940 வரை 4 ஆண்டுகள் ஐரோப்பா முழுவதும் பயணம் செய்து அவரைப் பற்றிய படச்சுருள்களை தயாரித்தார்.

உயிரோட்டமுள்ள படங்களை மிகுந்த சிரமத்துடன் தான் தயாரித்த காந்தி ஆவணப் படத்தினை அரசு அனுமதியுடன் சென்னை ராக்ஸி தியேட்டரில் ஆகஸ்டு மாதம் 23, 1940ஆம் ஆண்டு வெளியிட்டார். இது தமிழ் வருணனையுடன் வெளிவந்த முதல் காந்தி பற்றிய ஆவணப்படம். பின்னர் இது தெலுங்கு மற்றும் ஹிந்தி மொழிகளில் மொழிமாற்றம் செய்து திரையிடப்பட்டது.

சுதந்திர இந்தியாவில் இந்த ஆவணப் படத்தினை டில்லி கன்னாட் பிளேஸிலுள்ள இம்பீரியல் தியேட்டரில் ஏ.கே. செட்டியார் திரையிட்டார். இதைக் காண்பதற்காக இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் தன் மனைவியுடன் வந்திருந்தார் என ஏ.கே.

செட்டியாரே தன் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கின்றார். மேலும் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு வர இயலாத காரணத்தினால் திருமதி இந்திராகாந்தி வந்திருந்தார். பின்னர் இப்படத்தினை ஆங்கிலமொழியில் மொழி மாற்றம் செய்து அமெரிக்காவிற்கு எடுத்துச் சென்றார். அங்கு சான்பிரான்ஸிஸ்கோ நகரில் 1953ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ஆம் தேதி திரையிட்டார். இந்த நிகழ்ச்சிக்கு அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர்தன் மனைவி மேமி ஜெனிவா டூட் அம்மையாருடன் வந்து பாராட்டிவிட்டுச் சென்றார். ஏ.கே.செட்டியார் அவர்கள் இவற்றை 16 எம். எம். படச்சுருள்களாக மாற்றியமைத்து 1959 வாக்கில் பல சர்வதேச அருங்காட்சியகங்களுக்கு வழங்கியுள்ளார்.

இத்திரையிடல்களனைத்துமே பத்திகைகளில் செய்திகளாகி பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன. காந்தி ஆவணப்படத்தின் மூலப்பிரதிகள் எங்கிருக்கின்றன என்பது 1960களுக்குப்பிறகு யாருக்கும்தெரியாமலேயிருந்தது. சீரிய எழுத்தாளர் மற்றும் சினிமா வரலாற்று ஆய்வாளர் தியோடர் பாஸ்கரன் அவா்களும் அதனைத்தேடி புனே பிலிம்ஸ் டிவிஷனில் கிடைக்காத ஏமாற்றத்தினை தன் 2002ஆம் ஆண்டு இந்து நாளிதழ் கட்டுரையில் விவரித்துள்ளார். இதற்கிடையில் இதைத் தேடி அலைந்து கொண்டிருந்த சென்னை மேம்பாட்டுக் கல்வி மையத்தின் இணைப்பேராசிரியர், வரலாற்று அறிஞர் ஆ. இரா. வெங்கடாசலபதி இப்படச்சுருளின் மறுபதிப்புப் பிரதியினை ச ான்பிரான்ஸிஸ்கோ ஸ்டேட் பல்கலைக்கழகத்தில் கண்டெடுத்தார். தன் நண்பாகளான முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் விட்னி காக்ஸ் மற்றும் பிளேக் வெண்ட் வொர்த் ஆகியோரின் உதவியில்லாவிட்டால் அதன் பிரதியைப் பெற்றிருக்க முடியாது என்று பேராசிரியர் வெங்கடாசலபதி பிரண்டலைன் பத்திரிகை நிருபர் சுப்ரமணியனிடம் 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி 11-24 இதழில் பேட்டியளித்துள்ளார். ஆனாலும் சென்னை ராக்ஸி கொட்டகையில் 1940ஆம் ஆண்டு வெளியிட்ட படச்சுருளை நாம் மீட்டெடுக்க வேண்டியது மிகமிக அவசியம் என்று வெங்கடாசலபதி கூறுகிறார்.

இக்கட்டுரையாளர் முனைவர் த. ரவிச்சந்திரன் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகப் பொறுப்பாளராகப் பணியாற்றிய போது 2005 ஆம் ஆண்டில் முதல்தள அறைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த போது தற்செயலாக இந்த படச்சுருள் கிடைத்தது. ஏ.கே. செட்டியாரைப் பற்றி முழுமையாகத் தெரியாதகாலம் அது. இதுபற்றி காந்தி நினைவு அருங்காட்சியக செயலாளர் முனைவர் ச.பாண்டியன் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு செயலாளர் அறிவுறுத்தலின் பேரில் அப்படச் சுருளைப் பிரதியெடுக்க சென்னை காந்திக் கல்வி மைய இயக்குநர் (தற்போது டெல்லி தேசிய காந்தி அருங்காட்சியகம் இயக்குநர்) அண்ணாமலையிடம் கொடுத்தோம். சென்னையில் அதைப் பிரதி எடுத்து சி.டி.யாக மாற்றி ஒரு பிரதியினை மதுரை காந்தி நினைவுஅருங்காட்சியகத்திடம்கொடுத்தார். பிரதியெடுத்ததற்கான செலவினையும் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகமே ஏற்றுக் கொண்டது. அண்ணாமலை இப்படத்தினை 73 நிமிடங்கள் வருமளவிற்குப் புதுப்பித்து “விரலி” (Pendrive) வடிவில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வௌியிட்டுள்ளார்.

இந்த ஆவணப்படம் பற்றி நண்பர் அண்ணாமலை சென்னையில் பல பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி நல்ல வரவேற்பினைப் பெற்றது. மதுரை காந்தி மியுசியத்தில் 2006ஆம் ஆண்டில் நடந்த மாணவர்களுக்கான கோடைக்காலச் சிறப்புப் பயிற்சியில் இப்படம் பல மாணவர்களுக்கு

2006ஆம் ஆண்டிலேயே நூலக அரங்கில் காட்டப்பட்டுள்ளது.

ஏ.கே.செட்டியார், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும், ஐரோப்பாவிலும் 30க்கும் மேற்பட்ட செய்திப்படக் கம்பெனிகளுக்குச் சென்று காந்திஜியின் வாழ்க்கைக்கு உபயோகமான எல்லாப்படங்களையும் சேகரித்துள்ளார். மேலைநாடுகளில் படங்கள் சேகரிப்பது இந்தியாவை விடச் சுலபமாகவும் சிக்கனமாகவும் இருந்தது என்றும் கூறுகிறார்.

**கோகலேயின் தென்னாப்பிரிக்க வருகை**

கோபாலகிருஷ்ண கோகலே காந்தியடிகளின் அரசியல் குரு. இலண்டனுக்குச் சென்றபோது மகாத்மாவிற்குக்கிட்டிய நண்பர் எச்.எல். போலக் என்ற ஒரு யுதர். காந்தி படத்திட் டத்தினை அவரிடம் விளக்கிக் கூறிய போது ஒரு பழைய தகர டப்பாவினை எடுத்து 200 அடி நீளமுள்ள மிகப் பழைய சினிமாப்படம் ஒன்றின் பாசிடிவ் காப்பியினைக் காட்டியுள்ளார். கடந்த 27 ஆண்டுகளாக இதைப் பாதுகாத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதற்கு ஒரு காப்பி எடுத்து திரையில் போட்டுப் பார்த்த போது "இது காலஞ்சென்ற அருந்தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே தென்னாப்பிரிக்கா விஜயம் செய்தபோது எடுத்தபடம்" என்று கூறியுள்ளார். "கோகலே மட்டும் தானே இருக்கிறார். காந்தியடிகள் எங்கே?" என்று ஏ.கே. செட்டியார் கேட்ட போது இதோ "ஐரோப்பிய உரையில் காந்தியைப் பார்" என்றதும் செட்டியாரால் பேச இயலவில்லை. "நம் நாட்டின் சரித்திரச் சின்னங்களுள் இது ஒன்று என துணிந்து கூறலாம்" என்கிறார் ஏ.கே.செட்டியார்.

1912ஆம் ஆண்டில் மிகவும் பின்தங்கிய ஆப்பிரிக்கக் கண்டத்தில், காந்தியையும், கோகலேயையும் சினிமாப்படம் எடுத் திருப்பார்கள் என்று யாராவது எதிர்பார்த் திருக்க முடியுமா? இதை இத்தனை ஆண்டுகள் காப்பாற்றி வைத்திருந்த போலக்குக்கு நாம் அனைவரும் நன்றிக் கடன் பட்டிருக்கின்றோம்.

**மரியா மாண்டிஸோரி அம்மையார்**

டுவென் செஞ்சுரி ஃபாக்ஸ் நிறுவனத்தின் மேலாளருடன் பம்பாய் ரிட்ஸ் ஹோட்டலுக்கு உணவருந்தச் சென்றபோது (அங்கு வேட்டி கட்டியவர்களை அவமரியாதையாக நடத்துவர்) அரங்கு முழுவதும் வெள்ளையர்கள் உணவருந்திக் கொண்டிருந்தனர். அப்போது Hello Mr.Chettiar How are you என்று ஒரு ஐரோப்பியப் பெண் செட்டியாரை இன்முகத்துடன் வரவேற்றார். அவர்தான் இத்தாலி நாட்டில் பிறந்து மாண்டிசோரி கல்வி முறையை அறிமுகப்படுத்திய சீரிய கல்வியாளர் உலகப் புகழ்பெற்ற திருமதி மரியா மாண்டிசோரி அம்மையார். பின்னர் சென்னை அடையாறு தியாசாபிகல் சொசைட்டியில் தங்கியிருந்த மாண்டிசோரி அம்மையாரைச் சந்தித்து, உரையாடி காந்தியடிகள் பற்றி அவர் எழுதியக் கட்டுரையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு ஆங்கில வாக்கியங்களைச் சொல்ல வேண்டும்: அதையே அவருடைய தாய்மொழியின் இத்தாலிய மொழியிலும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்ட போது மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டாராம். அந்தவரலாற்றுச் சிறப்பு மிக்க வாக்கியங்கள்: "Every child in every corner of Europe knows Gandhi. When they see his picture they exclaim in their own language "Oh' this is Gandhi" ஆங்கிலம் தெரியாததால் மிகச்சிரமப்பட்டு ஆறுமுறை தவறாக உச்சரித்து ஏழாவது முறையே சரியாக படமெடுக்க முடிந்தது என செட்டியார் உணர்வுப் புர்வமாக இக்கட்டுரையில் விவரித்துள்ளார். தண்டியாத்திரை காந்தியடிகள் படத்தில் மிகமுக்கியமான காட்சி, தண்டியாத்திரை எனும் உப்புச் சத்தியாகிரகம். இந்தியாவில் இது சம்பந்தமாக எதுவும் கிடைக்காததால் வெளிநாடுகளில்

சேகரித்த 200 அடி படத்தைக் கொண்டு, தொகுத்து அமைப்புசெய்து அப்படத்தில் ஏ.கே.செட்டியார் இணைத்துள்ளார். தனிப்பட்ட ஒரு மனிதரிடம் தண்டி யாத்திரை சினிமாப்படம் 2000 அடி இருப்பதாக செய்தி கிடைத்ததும் ஏ.கே. செட்டியார் அவரை அணுகியுள்ளார். காந்தியடிகள் மீதுள்ள பக்தியால் தன் சொந்தப் பணத்தைச் செலவு செய்து தண்டியாத்திரையினை ஆரம்ப முதல் இறுதி வரை படம் எடுத்ததோடு பம்பாயில் நடந்த பெரிய ஊர்வலங்கள் போலீஸ் தடியடிப் பிரயோகம் ஆகியவற்றையும் அற்புதமாகப் படம் பிடித்திருந்தார். அரசியல் நிலை காரணமாக அப்படங்களைப் புதைத்து, மறைத்து வைத்துள்ளார். அவர் "இந்தப் படப்பிடிப்பிற்காக ரூ.3000 செலவு செய்திருக்கின்றேன். எனக்கு இப்போது மிகவும் பணக்கஷ்டம். உங்களுக்கு விருப்பமானதைக் கொடுங்கள்" என்றாராம். ஏ.கே.செட்டியாருக்கும் அப்போது பணக் கஷ்டம் இருந்ததால் ஆயிரம் ரூபாய் கொடுத்து தனக்குத் தேவையான 1000 அடிகளை பிரதி எடுத்துக்கொண்டு நன்றி தெரிவித்துள்ளார்.

காந்தியடிகளின் தண்டியாத்திரை மிக அற்புதமான ஒரு படம். படப்பிடிப்பும் மிகவும் தரமுள்ளது. பம்பாயில், போர்பந்தரில் நடைபெற்ற போலீஸ் தடியடிப் பிரயோகத்தை மிகவும் சிறந்த முறையில் தன் உயிரையும் பொருட்படுத்தாது படம் பிடித்தவரின் துணிவையும், தேச பக்தியையும் பார்த்து ஏ.கே.செட்டியார் வியந்துள்ளார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 1948இல் ஏ.கே.செட்டியார் பம்பாயில் காந்தியடிகளின் இந்திப் படம் தயாரித்த போது ஒரு குஜராத்தி அன்பர்தம்மிடமிருந்த ஐயே இந்திய தேசியப் படைபற்றிய சுபாஷ் சந்திர போஸ் மற்றும் பல சரித்திரக் காட்சி கள் கொண்ட பிலிம் சுருளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். காந்திபடத்தில் பல இடங்களில் சுபாஷ் சந்திர போஸ் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.ஐக்கிய நாடுகள் சபை அஞ்சலி

காந்தியடிகள் மறைந்தபோது ஐக்கிய நாடுகள் சபையினர்தம் கொடியைத் தாழ்த்தி அஞ்சலி செய்துள்ளனர். அந்தப் படங்களை எல்லாம் அவர்கள் ஏ.கே. செட்டியாருக்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளனர். சி.எஃப் ஆண்ட்ரூஸ் ஏழைப் பங்காளரும், காந்தியடிகளால் "தீன் பந்து" என்ற அடைமொழியுடன் அழைக்கப்பட்டவருமான சார்லி எஃப் ஆண்ட்ரூஸ் எனும் ஆங்கிலேயரை அவரின் கடைசிக் காலத்தில் சாந்தி நிகேதனத்தில் ஏ.கே.செட்டியார் சந்தித்துள்ளார். பத்தே நிமிடங்கள் அவரோடு உரையாடிவிட்டு, ஒரு புகைப்படத்தினையும் எடுத்துள்ளார். இரண்டு மாதங்களில் கல்கத்தா வந்து பிஷப் வீட்டில் தங்குவதாகவும் அப்போது படம் எடுத்துக் கொள்ளலாமென்றும் ஆண்ட்ரூஸ் கூறியுள்ளார். உடல் நிலை சரியில்லாமல் கல்கத்தாவந்த சில நாட்களிலேயே அவர் காலமாகிவிட்டார். அம்மாமனிதரைப் படம்பிடித்து ஒளிப்பதிவு செய்யக் கொடுத்துவைக்காதது ஏ.கே.செட்டியாருக்கு ஒரு பெரும் மனக்குறைதான். சர்சி.வி.ராமன் காந்தியடிகள் காலத்தில் வாழ்ந்தவரும் நோபல் பரிசு பெற்றவருமான புகழ்பெற்ற விஞ்ஞானி சர்.சி.வி.ராமன். அவர் காந்தியடிகளை "மகாத்மா" என்று சொல்வதில்லை. அவர்ஒத்துக் கொண்டதால் சென்னை நியுடோன் ஸ்டுடியோவில் படப்பிடிப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடைசி நிமிடத்தில் சர்.சி.வி.ராமன் எதிர்பாராத நேரத்தில் "மகாத்மா" என்று கூறுங்கள் என படக்குழுவினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி "மகாத்மா காந்தி" என அழுத்தம் திருத்தமாக நோபல் விஞ்ஞானி உச்சரித்தது ஆச்சரியமான விஷயம். அதேபோல காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்புப்

பணியினை மனதாரப் புகழ்ந்தும் இரு வாக்கியங்களை சர்.சிவி.ராமன் கூறியுள்ளார்.

**ஜவஹர்லால் நேரு, ஆச்சார்யா கிருபளானி**

அலகாபாத் செல்லும் ரயிலில் ஆச்சர்யா கிருபளானியைச்சந்தித்துஉரையாடியுள்ளார் ஏ.கே.செட்டியார். அலகாபாத் "ஆனந்த பவன்"" மாளிகை நேரு குடும்பத்தினர் நன்கொடையாக வழங்கியது. காங்கிரஸ் காரியாலயம் அங்கு இயங்கிவந்தது. ஆச்சார்யா கிருபளானி அவர்கள் நூல் நூற்பது போல படம் பிடித்துள்ளார். பின்னர் அவரது உதவியுடன் நேரு தன்குடும்ப மாளிகையை நாட்டுக்கு வழங்கிய பத்திரத்தையும் ஏ.கே.செட்டியார் படம் பிடித்துள்ளார். நேரு அவர்களைப் படம் பிடிப்பதற்கும் கிருபளானி அவா'கள் சம்மதித்து உதவியுள்ளார்.

ஏ.கே.செட்டியார் கல்கத்தா சென்று விட டாக்டர் பதி அப்பணியைச் செய்தார். நேரு மாடியில் முன்புற வராந்தாவில் உலவிக் கொண்டிருந்ததைப் படம் பிடித்து நூல் நூற்க வேண்டினர். ஆனால் "4 மணிக்குத்தான் நான் நூற்பேன் அப்போது வாருங்கள்" என்று நேரு கூறியுள்ளார். நேரு நூல் நூற்றதைப்பற்றி ஏ.கே. சேட்டியார் கூறுகிறார். நேரு நூல் நூற்றால் அந்நூலிலிருந்து வேஷ்டி நெய்ய முடியாது. ஜமக்காளம் தான் செய்யலாம். நூல்நூற்கும் போது அடிக்கடி நூல் அறுந்து போகும் அதைச் சரிப்படுத்துவார். நூல் அறுந்து போகும் காட்சிகளையெல்லாம் விடாமல் படம் பிடித்தார் டாக்டர்பதி. அப்பொழுது முகத்தைச் சுழித்துக் கொண்டு நேரு காமிராவைப் பார்ப்பார். இந்தக் காட்சி படத்தில் வந்தபோதெல்லாம் படம் பார்த்த மக்கள் சிரித்து மகிழ்ந்தார்கள். நேருவைக் கட்டாயமாக நூல் நூற்கச் செய்ய காந்தியடிகளைத் தவிர வேறு யாராலுமே முடியாது" என்று கூறுகிறார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் அப்போது கல்கத்தா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றி வந்தார். ஒருமுறை அவர் இல்லத்தில் ஏ.கே.செட்டியார் அவரைச் சந்தித்து காந்திபற்றி மூன்றே வாக்கியங்கள் அவர் கூறவேண்டும். அவற்றைப் படமெடுக்கவுள்ளோம் என்றார். அவரும் மகிழ்வுடன் சம்மதித்து மறுநாள் ஸ்டுடியோவுக்கு வருவதாக ஒத்துக் கொண்டாராம். அவர்

படப்பிடிப்பின் போது அற்புதமான ஆங்கிலத்தில் பிழையின்றி மூன்று வாக்கியங்களையும் உச்சரித்தாராம். அதில் ஒன்று "Gandhi's supreme faith is God and Nonviolence makes him out a Profoundly Religions man. பின்னர்1942ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சென்னை எட்வர்ட்ஸ் எலியட்ஸ் தம் வீட்டில் தங்கியிருந்த போது அவருக்கு காந்தி படத்தினைத் தனியாகத் திரையிட்டுக்காட்ட ஏ.கே.செட்டியார் விரும்பியதால் ஜெமினி ஸ்டுடியோவில் உள்ள சிறிய திரையரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவரோடு சேர்ந்து படம்பார்க்க அழைக்கப்பட்ட ஐந்தாறு பேர்களில் டி.டி.கிருஷ்ணமாச்சாரியாரும் ஒருவர். தன்படத்தையும் பேச்சையும் கேட்டு டாக்டர்ராதாகிருஷ்ணன் அவர்கள் மகிழ்ச்சியடைந்ததாக ஏ.கே.செட்டியார் குறிப்பிட்டுள்ளார். திருப்புர் ராட்டை சுற்றும் பெண்கள் 1939ஆம் ஆண்டில் சென்னை ஹிந்து பத்திரிகையில் ஒரு மரத்தடியின் கீழ் சுமார் 200 பெண்கள் கைராட்டைச் சுற்றும் அரிய படம் ஒன்றை ஏ.கே. செட்டியர்பார்த்துள்ளார். அப்படத் தினை எடுத்தவர் திருப்புர் சர்க்கா சங்கத்தின் செயலர் "குடிநூல்" மாத இதழின் ஆசிரியர் மற்றும் சிறந்த தேச பக்தர்சி.ஏ.அய்யாமுத்து. அந்தப் படமானது திருப்புருக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் எடுத்தது.

ஏ.கே. செட்டியாருக்கு அவர் நண்பர் என்பதால் அவரைச் சந்தித்து உரையாடிய போது அடுத்தமுறை நூல் நூற்கும் போது தெரிவியுங்கள் அதனைப் படம் பிடித்து காந்தி பிலிமில் சேர்க்கலாம் என்று ஏ.கே. செட்டியர் அவரிடம் வேண்டுகோள் விடுத்தார். அவரோ "நீங்கள் படம் பிடிப்பதற்காகவே நான் ஏற்பாடு செய்கிறேன். கதர்இயக்கத்திற்கு இது ஒரு நல்ல பிரச்சாரமாக இருக்கும்" என்று உறுதியளித்துள்ளார்.

ஒரு குறிப்பிட்ட நாளில் படம்பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அய்யாமுத்து அவர்களே எதிர்பாராத வகையில் மூன்று கிராமங்களிலிருந்து சுமார் இரண்டாயிரம் பெண்கள் நூல் நூற்பில் கலந்து கொள்ள ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர்.

அய்யாமுத்து அவர்களின் சிறந்த ஏற்பாட்டின் பேரில் மூன்று கிராமங்களுக்கும் ஏ.கே.செட்டியார், டாக்டர்பதி குழுவினர் சென்று பெண்கள் நூல் நூற்கும் அற்புதமான காட்சியினைப் பல கோணங்களில் படம் பிடித்தனர். "நூல் நூற்ற கிராமங்களிலெல்லாம் திருவிழாப் போன்று காட்சியளித்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால் நூல் நூற்ற பெண்களில் பெரும்பாலோனோர் காமிராவைத் திரும்பிக்கூடப்பார்க்கவில்லை" என்று ஏ.கே.செட்டியார் தன் கட்டுரையில் பதிவிட்டுள்ளார்.

பின்னர் சர்க்கா சங்க நடைமுறைகளை எல்லாம் படம் பிடித்துள்ளனர். இந்த நூல் நூற்றக் காட்சியின் பின்னணியாக நாமக்கல் கவிஞர்ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பாடிய "ஆடு ராட்டே" என்னும் பாடல் உள்ள அற்புதமான இப்படம் நானூறு அடி நீ ளத்திற்கு இரண்டாயிரம் தமிழ்ப் பெண்கள் நூற்ற காட்சியாய் அமைந்திருந்தது.

## முடிவுரை

இளம்வயதில் காந்தியத்தால் ஈர்க்கப்பட்ட ஏ.கே.செட்டியாரின் உன்னதக்கனவு காந்தியமும் வரலாற்றுச்சிறப்பும்மிக்க ஆவணப்படமாக நனவாகியுள்ளது.

தொழில்நுட்பம் பெரிதும் வளராத காலகட்டத்தில் இலட்சிய வேகம்கொண்ட ஒரு தனிமனிதரின் கடும்மனித உழைப்பாலும் பெரும் பொருட்செலவாலும் காந்தி ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

காந்தியின் வாழ்க்கை காலவரிசைப்படி ஆவணப்படமாக்கப்படவில்லை. மாறாக ஏ.கே.செட்டியார் தனக்குக் கிடைத்த படச்சுருள்களைத் தனது ரசனைக்கு ஏற்ப வெட்டியும் ஒட்டியும் தொகுத்தமைத்துள்ளார்.

காந்தி மறைந்து 72 ஆண்டுகள் கடந்த பின்னரும் இரத்தமும் சதையுமாக இப்படியொரு மாமனிதர் இப்புமியில் வாழ்ந்திருந்தார் என்பதை மெய்ப்பிக்கும் ஓர் அறிய வரலாற்று ஆவணமாக இந்த ஆவணப்படம் திகழ்கின்றது.

காந்தி பற்றிய திரைப்படங்களால் தரவியலாத மனவெழுச்சியை இப்படம் நமக்கு நல்குகிறது.

மகாத்மா தமிழர்களால் ஈர்க்கப்பட்டார். தமிழர்கள் மகாத்மாவால் ஈர்க்கப்பட்டனர். காந்தியைத் தமிழர்களின் வாழ்விலிருந்தும் மனங்களிலிருந்தும் நீக்கமுடியாது என்பதற்கு இப்படமும் ஒரு சான்றாக அமைகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. ஏ.கே. செட்டியார். *(2003).* அண்ணல் அடிச்சுவட்டில். சென்னைதென்னித்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
2. ஏ.கே. செட்டியார். *(2003).* அண்ணல் அடிச்சுவட்டில். தொகுப்பு ஆ.இரா.வேங்கடாசலபதி காலச்சு வடு பதிப்பகம்.
3. ஏ.கே.செட்டியார். *(1957).* உலகம் சுற்றும் தமிழன். குமரிமலர்காரியாலயம், சென்னை.
4. ஏ.கே.செட்டியார். *(2016).* புண்ணியவான் காந்தி, திரட்டித் தொகுப்பு. கடற்கரய் மத்தவிலாச அங்கதம், சென்னை, சந்தியா பதிப்பகம்.
5. தியோடர் பாஸ்கரன் *(2002)* "தி மேக்திஸ் ஆப் மகாத்மா காந்தி" (ஆங்கிலம்) தி ஹிந்து, (Ref. *18-06-2011).*
6. மு.ரேவதி. "ஏ.கே. செட்டியார் - தமிழ் வளர்த்த சான்றோர்கள்" *1997*
7. தி ஹிந்து, மெட்ரோ பிளஸ் "ஏடாகுமெண்டரிஆன்காந்தி" (ஆங்கிலம்) *26-07-2004* (Ref. *18-06-2011).*